சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். ஓ.எஸ்.109/2015

2018ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW2. ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சுயம்புசெல்வம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கருப்பசாமி | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>குறுக்கு விசாரணை (5,6 பிரதிவாதிகளுக்காக)</u>

நான் கரிசல்குளத்தில் குடியிருக்கிறேன். வாதி, பிரதிவாதிகளை தெரியும். வாதி அவரது தாத்தா அவர் தந்தையுடன் பிறந்தவர்களை தெரியும். வாதியின் தந்தை சுப்பிரமணியதேவர் அவருடன் பிறந்தவர்கள் போஸ் மற்றும் பேச்சியம்மாள். வாதியுடன் பிறந்தவர்கள் 3 பேர். ஞானமணி, செல்லச்சாமி மற்றும் சேகர். போஸ் என்பவருக்கும் கமலம் என்பவருக்கும் திருமணம் நடந்தது என்று தெரியும். போஸ் என்பவர் மனைவியின் நடத்தையில் சரியில்லை என்று சொல்லி மருந்து குடித்துவிட்டார் என்று சொல்லியிருக்கிறேன் அந்த விபரம் எல்லோரும் சொன்னதால் நானும் போய் பார்த்தேன். போஸ் இறக்கும் போது வாரிசு யாரும் இல்லை. 3ம் பிரதிவாதி கார்த்திகைசெல்வியின் பெற்றோர் யார் என்று எனக்கு தெரியாது. சொத்துக்கள் கரிசல்குளத்தில் உள்ளன. 15ம் இலக்க சொத்து கதிரேசன் என்பவருக்கு பாத்தியம் ஆனது. கதிரேசனுக்கு எப்படி பாத்தியபட்டது என்றால் சுப்பிரமணியத்தேவரிடம் எழுதிவாங்கியது என்று சொன்னார்கள். 15இலக்க சொத்து வருவாய் ஆவணங்களில் பெரியகருப்பதேவர் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. பெரியகருப்பதேவருக்கு வாரிசுகள் யார் என்றால் சக்திவேல் மற்றும் கதிரேசன் ஆவார்கள். 15இலக்க சொத்து சக்திவேல் மற்றும் கதிரேசன் அனுபவத்தில் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியும். சக்திவேலின் மகளும் கதிரேசனும் சேர்ந்து 6ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. 15இலக்க சொத்தில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் வேறு நபர் வாடகைக்கு

குடியிருக்கிறார்கள். போதும்பொண்ணுன் அனுமதியின் பெயரில் வாடகைக்கு இருக்கிறார். 15லக்க சொத்தில் 5, 6 பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றும் வாதி அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் அது பற்றி தெரியாது.

மறுவிசாரணை

இல்லை.